THE TIMES OF INDIA
சமயம்

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு: சிபிஐ விசாரணை நியாயமா இல்ல.. உயர்நீதிமன்றம் கடும் அதிருப்தி!

Authored By எழிலரசன்.டி | Samayam Tamil 15 Jul 2024, 5:07 pm

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக சிபிஐக்கு சென்னை உயர் நீதிமன்றம் சரமாரி கேள்விகளை முன்வைத்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக 2018ம் ஆண்டு மே மாதம் நடந்த போராட்டத்தில் காவல் துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 16 பேர் பலியாகினர். இந்த சம்பவம் தொடர்பாக நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் விசாரித்து, காவல் அதிகாரிகள் உள்பட பலர் மீது நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்தது.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். துப்பாக்கிச் சூடு தொடர்பான வழக்கை முடித்து வைத்த தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று அதில் வலியுறுத்தி இருந்தார்.

இந்த வழக்கு கடந்த முறை விசாரணைக்கு வந்தபோது, தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து குற்றம்சாட்டப்பட்ட அதிகாரிகள் யாரும் இதுவரை வருந்தவில்லை என்றும் அவர்களுக்கு எதிராக கொலை வழக்கு தொடரப்பட வேண்டும் எனவும் நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர். இவ்வழக்கு நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், செந்தில் குமார் அமர்வில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது சிபிஐ தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையை ஆய்வு செய்த நீதிபதிகள், “தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு வழக்கில் சிபிஐ விசாரணை நியாயமாக இல்லை. சம்பவம் நடந்த இடத்தில் இருந்து தூரத்தில் உள்ள குடியிருப்பு பகுதிகளிலும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. அப்படி இருக்க எந்த அதிகாரியும் தவறு செய்யவில்லை என்று எப்படி அறிக்கை அளிக்க முடியும். இத்தனை ஆண்டுகள் சிபிஐ விசாரணை நடத்தியும் பலன் இல்லை” என்று கருத்து தெரிவித்தனர்.

மேலும், 100 நாட்கள் தொடர் போராட்டம் நடந்த நிலையில், அங்கு ஏதாவது வன்முறை நிகழ்ந்ததா என்றும் கேள்வியை முன்வைத்தனர். சிபிஐ விசாரணையின் முடிவு கவலை அளிக்கும் வகையில் உள்ளதாகவும் நீதிபதிகள் அதிருப்தி தெரிவித்தனர்.

தொடர்ந்து, “தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு நடந்த காலத்தில் பணியாற்றிய காவல் துறையினர் உள்ளிட்ட அதிகாரிகளின் சொத்து விவரங்களை விசாரிக்க வேண்டும்” என லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கினை இரண்டு வாரங்களுக்கு தள்ளிவைத்துள்ளனர். இதனால் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு தொடர்பான வழக்கு விசாரணை தீவிர கட்டத்தை எட்டியுள்ளது.

https://tamil.samayam.com/latest-news/state-news/bjp-tn-leader-annamalai-question-to-chief-minister-mk-stalin-over-neet-and-education-state-list-issue/articleshow/111755925.cms